

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் அருகே உள்ள திருமலாபுரம் ஊராட்சியில் திருமலாபுரம் கிளை கழகச் செயலாளர் எஸ்.பி.முருகன் இல்ல புதுமனை புகுவிழா நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்று ரிப்பன் வெட்டி திறந்து வைத்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம். எல்.ஏ.தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், ராணி ஸ்ரீகுமார் எம்.பி. தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு, சீனிவாசன், பரமகுரு, மாவட்டப் பொருளாளர் சரவணன், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துச்செல்வி ஒன்றிய செயலாளர் பெரியதுரை உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் மாமன்னர் மருதுபாண்டியர்கள் வெளியிட்ட223வதுஆண்டு ஜம்புத்தீவு பிரகடனத்தை நினைவுகூரும் வகையில் மாமன்னர் மருதுபாண்டியர்கள் தூக்கிலிடப்பட்ட நினைவிடத்தில் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினார்.

### க.செல்வராஜ் எம்.எல்.ஏ. தலைமையில் – நீலகிரி நாடாளுமன்றத் தொகுதி –

# அவிநாசி சட்டமன்றத் தொகுதியில் வாக்காளர்களுக்கு ஆ.ராசா எம்.பி. நன்றி தெரிவித்தார்!

திருப்பூர், ஜூன் 19 -

திருப்பூர் வடக்கு மாவட்டம், அவிநாசி புதிய பேருந்து நிலையம் முன்பு திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் நீலகிரி தொகுதியில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச்செய்த அவிநாசி சட்ட மன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு கழக துணை பொது செயலாளர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.ராசா நன்றி தெரிவித்தார்.

அப்போது அவர் பேசியதாவது : நீலகிரி நாடாளுமன்ற தொகுதிக்கு வேட்பாளராக அறிவிக்கப்பட்டு, பெரம்பலூரிலிருந்து சாலை வழியாக வந்தபோது, இந்த தொகுதிக்குள் முதன்முதலாக அவிநாசிக்குள் தான் நான் நுழைந்தேன். இந்த முறை நான் பெரம்பலூர் வழியாக வரவில்லை. தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தின் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்துவிட்டு, விமானம் மூலமாக கோவை வந்தேன். அப்போது நிர்வாகிகள் அன்னூருக்கு சென்று விட்டு, மேட்டுப்பாளையம் சென்று விட்டு அவிநாசிக்கு வரலாம் என்றனர். ஆனால் அன்றும், வெற்றி பெற்ற இன்றும் அவிநாசிக்குத் தான் முதன்முதலாக வந்துள்ளேன். எப்போதும் அ.தி.மு.க. வின் கோட்டை என்று பேசப்பட்ட அந்த கோட்டைக்குள் ஒரு ஓட்டை போட்டு தி.மு.க.வுக்கு 35ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் மிக அதிகமாக வாக்களித்து வெற்றிபெறச் செய்த அந்த அவிநாசி மக்களை நான் சந்தித்து விட்டுத் தான் பிறகு மற்றவர்களையெல்லாம் சந்திக்க வேண்டும். அது தான் முறை என்று சொல்லி நான் கோவையிலிருந்து இந்த பகுதிக்கு அவிநாசிக்கு முதன் முதலில் வந்து உங்களையெல்லாம் சந்தித்து நன்றி சொல்கிற வாய்ப்பை பெற்று இருக்கிறேன்.

நீலகிரி தொகுதியில் மேலே 3 தொகுதிகள் சரியாக இருக்கும். கீழே உள்ள தொகுதி தான் இழுபறியாக இருக்கும் என்றெல்லாம் சொல்லிவருவார்கள். ஆனால் அந்த பழிச் சொல்லை யெல்லாம் நீக்கி நாங்கள் மற்றவர்களுக்கு சளைத்தவர்கள் அல்ல என்று சொல்லுகிற அளவுக்கு இந்த அவிநாசி தொகுதியிலே ஏறத்தாழ 35 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச்செய்து என்னை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்த உங்களின் ஒவ்வொருவரின் பாதத்தையும் தொட்டுவணங்கி என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**முதல் குரல் கொடுத்தவர் முதல்வர்!**

இன்றைக்கு மீண்டும் ஆட்சி பொறுப்பை ஏற்று இருக்கிற மோடி, பழைய மோடி அல்ல, பழைய மோடியாக இருக்க முடியாது. இருக்க அவிநாசி அவரை தூங்க விடாது. அயோத்தியில் இராமரை தொடங்கினார். இராமர் அவருக்கு உதவி செய்யவில்லை. எழுதிவைத்துக் கொள்ளுங்கள். இனிமேல் அவிநாசியப்பர் அவரை தூங்க விடமாட்டார், எங்களுக்கு கடவுள் நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ, ஆனால் கடவுளை நம்புகிறவன் இப்படித்தான் வாழ வேண்டும் என்கிற வரை முறை ஒன்று இருக்கிறது. அந்த வரைமுறைக்குள் வராத ஒரு மனிதர் மோடி என்ற மஸ்தான். அவரை இன்றைக்கு ஓட ஓட விரட்ட வேண்டும் என்று திராவிட மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற நமது அன்புத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தான் முதல் குரல் கொடுத்தார்.

இந்தியாவை காப்பாற்ற வேண்டும் என்றால் அரசியல் சட்டத்தை காப்பாற்ற வேண்டும். அரசியல் சட்டம் இருந்தால் தான் இந்த நாட்டில் இருக்கிற பல்வேறு வேறுபட்ட மொழி பேசுகிற மக்கள், பல்வேறு மத வழிபாட்டுக்குரிய மக்கள், பல்வேறு உணவு உடையுடன் வேற்றுமை கொண்டுள்ளோர் அனைவருக்கும் இந்திய அரசியல் சட்டம் தான் எல்லோரது ஒற்றுமைக்கும் காரணமாக உள்ளது. அதனால் தான் வேற்றுமையில் ஒற்றுமை கொண்டிருக்கிறோம். அரசியல் சட்டத்துக்கு வேட்டு வைப்பவர் மோடி. எனவே, அரசியல் சட்டத்தை காப்பாற்ற மோடியை தூக்கி எறியுங்கள் என்று முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் சொன்னார்.

இன்றைக்கு 240 பேர் தான் மோடியிடம் உள்ளனர். பழைய மோடி உள்ளே வரும்போது, மோடி, மோடி என்று சத்தம் கேட்கும். இனி போடி, போடி என சத்தம் கேட்கும், பழைய மோடி நாடாளுமன்றத்துக்கு வர மாட்டார். தமிழ்நாட்டை தமிழ்மொழியை மதிக்க மாட்டார். எந்த மாநில சர்க்காரையும் மதிக்க மாட்டார். இனி மேல்தான் இருக்கு. அரசியல் சட்டத்தை மாற்றி விட்டு இது ஒரு மதத்துக்கான நாடு என்று எந்த மோடி சொன்னாரோ? நாட்டில் ஒரே மொழி தான் இருக்க வேண்டும் என்று எந்த மோடி சொன்னாரோ? இந்திய நாட்டில் ஒரே தேர்தல் தான் நடக்க வேண்டும் என்று எந்த மோடி சொன்னாரோ? அரசியல் சட்டத்தை மாற்றுவோம் என்று எந்த மோடி சொன்னாரோ? அந்த மோடி அரசியல் சட்டத்தை எடுத்து முத்தம் கொடுக்கிற அளவுக்கு கொண்டு போய் விட்ட கட்சி நமது திராவிட முன்னேற்ற கழகம் தான், அதனால் மோடிக்கு வேட்டு இனி முதன்முத லில் நீலகிரியில் இருந்துதான் ஆரம்பிக்கிறது. அதிலும் அவிநாசியிலிருந்து தான் ஆரம்பிக்கிறது.


எழுதி வைத்துக்கொள்ளுங்கள். 2026 லும் மீண்டும் நம் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான நமது திராவிட மாடல் ஆட்சி தான். நீலகிரி தொகுதிக்கு வரவேண்டிய எந்த திட்டமாக இருந்தாலும், எந்த கொம்பனாலும் நிறுத்த முடியாது. தொகுதியில் கேட்ட அனைத்து திட்டங்களையும் நிறைவேற்றி இருக்கிறோம். இன்னும் ஏராளமாக திட்டங்களை நிறைவேற்றி வழங்குவோம். நாம் நினைக்கிற சமூக நீதி யெல்லாம் டெல்லியில் உருவாக்குவதற்கு நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எங்களையெல்லாம் பணித்திருக்கிறார். அந்தப் பணிகளை யெல்லாம் நாங்கள் செய்வோம். இந்தியாவுக்கான பணியை செய்கிற அதே நேரத்தில் நீலகிரி நாடாளுமன்றத்துக்குள் இருக்கிற ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும், என்ன தேவையோ? அவற்றையெல்லாம் கேட்டு இந்த 5ஆண்டு காலத்தில் என்னால் இயன்ற அளவுக்கு அனைத்து பணிகளையும் செய்து தருவேன் என உறுதியளிக்கிறேன் என்று ஆ. இராசா எம்.பி. பேசினார்.

இதில் கழக மருத்துவர் அணி துணைச் செயலாளர், அவிநாசி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் மருத்துவர் கோகுல் கிருபா சங்கர், கோவை தங்கம், திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாவட்ட அவைத்தலைவர் க.நடராசன், பொருளாளர் சு. சாமிநாதன், துணை செயலாளர்கள் பொங்கலூர் ஒன்றியக்குழு பெருந்தலைவர் வழக்கறிஞர் எஸ்.குமார், வழக்கறிஞர் சி.கே.நந்தினி, டிஜிடல் எஸ்.சேகர், தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.சரவணன் நம்பி, அவிநாசி ஒன்றிய கழக செயலாளர், திருப்பூர் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஈ.ப.சிவப்பிரகாஷ், திருமுருகன் பூண்டி ஒன்றிய கழக செயலாளர் எஸ்.ஆர்.பழனிசாமி, சேவூர் ஒன்றிய கழக செயலாளர் க.பால்ராஜ், திருமுருகன் பூண்டி நகர கழக செயலாளர் மூர்த்தி (எ) கிருஷ்ணசாமி, அவிநாசி பேரூர் கழக செயலாளர் திராவிடன் வ.வசந்தகுமார், திருப்பூர் வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எல்.ஐ.சி அவிநாசியப்பன், திருமுருகன்பூண்டி நகர மன்ற தலைவர் நா.குமார், அவிநாசி பேரூராட்சி மன்ற தலைவர் தனலட்சுமி பொன்னுசாமி, அவிநாசி பேரூர் கழக அவைத்தலைவர் ராயப்பா உள்ளிட்ட கழகத்தினர், ‘இந்தியா’ கூட்டணி கட்சியினர் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏழாஞ்சேரி கெ. வரதன்

### ஜூன் 19 (2003)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்திலும் பின்னர், கழகம் துவங்கிய பின், கிளைச் செயலாளர், செய்யாறு வட்டச் செயலாளர், வெம்பாக்கம் ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

1977–ல் காஞ்சிபுரத்தில் தலைவர் கலைஞர் தலைமையில் நடைபெற்ற அண்ணாவின் “நீதிதேவன் மயக்கம்” நாடகத்தில் நடித்தவர்.

ஊராட்சி மன்றத்தில் தலைவர், துணைத் தலைவர், கூட்டுறவு சங்கத் தலைவர், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் என பல்வேறு பதவிகள் வகித்தவர்.

பேரறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்ற ‘இந்தி எதிர்ப்பு போராட்டத்தில்’ காஞ்சிபுரம் அருகே உள்ள நத்தப்பேட்டையில் ரயில் மறியலில் ஈடுபட்டு ஆறுமாத கடுங்காவல் தண்டனையை கடலூர் சிறையில் அனுபவித்ததோடு, நெருக்கடி கால மிசாவில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# ஒட்டன்சத்திரம் தொகுதி வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆய்வு!

### அமைச்சர் அர.சக்கரபாணி – ஆர்.சச்சிதானந்தம் எம்.பி. பங்கேற்பு!

திண்டுக்கல், ஜூன் 19 -

ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்து துறை அலுவலர்களுடன் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆய்வு செய்தார். திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம் ஆகியோர் பங்கேற்றனர். காளஞ்சிபட்டியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு திண்டுக்கல் ஆட்சியர் பூங்கொடி தலைமை வகித்தார்.

இக்கூட்டத்தில் பங்கேற்ற அமைச்சர் அர.சக்கரபாணி பேசும் போது, தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் தொடர்ந்து செயல்படுத்தி பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார். பொதுவிநியோகத் திட்டத்தில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் குடிமைப்பொருட்கள் சென்றடைய வேண்டும் என்பதற்காக நியாய விலைக்கடைகள் மூலம் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகிறது.

தமிழகத்தில் அனைத்து நியாயவிலைக்கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்கள் வழங்குவதற்கு பயோமெட்ரிக் முறை அமைக்கப்பட்டு விட்டது. இந்த முறையில் கைரேகை பதிவு மேற்கொள்வதில் சிரமங்கள் ஏற்படுவதால் கண்கருவிழி பதிவு மூலம் பதிவுகள் மேற்கொண்டு பொருட்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தமிழகத்தில் 35000 நியாய விலைக்கடைகளுக்கும் கண்கருவிழி பதிவு கருவி வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிகழ்ச்சியில் 102 நியாயவிலைக் கடைகளுக்கான கண் கருவிழி பதிவு கருவிகளை விற்பனையாளர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. குடும்ப அட்டைதாரர்களுக்கு தரமான அரிசி வழங்க பல்வேறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது பொதுமக்களுக்கு தரமான அரிசி வழங்கப்பட்டு வருகிறது. ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் காவிரி குடிநீர் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்காக குழாய்கள் பதிக்கும் பணிகள், மேல்நிலை குடிநீர் தொட்டிகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில், நாமக்கு நாமே திட்டம், நபார்டு மற்றும் கிராம சாலைகள் திட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுநிதி, மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித்திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் பல்வேறு வளர்சித்திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பணிகளை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும். ஒட்டன்சத்திரம் தொகுதி மட்டுமின்றி திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்ற தொகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப்பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர துரித நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

பொதுமக்களுக்கு தேவையான வளர்ச்சிப் பணிகள் குறித்து உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டம் நடத்தி, மனுவாக அளிக்கும்பட்சத்தில். அது குறித்து ஆய்வு மேற்கொண்டு. நிதி ஒதுக்கீடு பெற்று வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றப்படும். உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளின் கருத்துகளை உள்வாங்கி அவற்றை செயல்படுத்த துறை அலுவலர்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் விவசாயிகளின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். தற்போது, குளங்கள் உள்ளிட்ட நீர்நிலைகளில் மண் அள்ள இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து வட்டாட்சியர் மூலம் அனுமதி பெற்று மண் அள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

“மரம் வளர்த்தால் மரம் நம்மை வளர்க்கும்“ என்ற முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் வாக்குப்படி, மரக்கன்றுகள் நடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வீட்டுக்கு ஒரு மரம் வளர்க்க வேண்டும். சிறிய ஊராட்சிகளில் குறைந்தது 5000 மரக்கன்றுகள் பெரிய ஊராட்சிகளில் 10,000 மரக்கன்றுகள் நட்டு வளர்க்க வேண்டும். ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டி வழங்கும் வகையில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் 8.00 இலட்சம் வீடுகள் கட்டி வழங்கப்படவுள்ளது. அதேபோல் தமிழகத்தில் ஏற்கனவே தொகுப்பு வீடுகள் திட்டத்தில் கட்டப்பட்ட பழைய வீடுகளை பழுது பார்த்து வழங்குவதற்காக ரூ.2,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்தால் தகுதியுள்ளவர்களுக்கு 15 நாட்களில் குடும்ப அட்டை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி கடந்த 3 ஆண்டுகளில் 15.75 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் 2 இலட்சம் குடும்ப அட்டைகள் விரைவில் வழங்கப்படவுள்ளது. பெண்களுக்கு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா பயணம் மேற்கொள் ளும் வகையில் செயல்படுத்தப்படும் விடியல் பயணத்திட்டத்தில் இதுவரை 440 கோடி பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் 1.15 கோடி பெண்கள் பயனடைந்து வருகின்றனர். பெண்கள் உயர் கல்வி படிப்பதை உறுதி செய்யும் வகையில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தற்போது மாணவர்களுக்கும் வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசு பள்ளியில் ஆண்கள் 6 முதல் 12 -ஆம் வகுப்பு வரை படித்து உயர் கல்விக்கு சென்றால் அவர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் தமிழ்ப்புதல்வன் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசு பள்ளியில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி திட்டத்தில் 31,000 பள்ளிகளைச் சேர்ந்த 17.00 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டம் தற்போது அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் செயல்படுத்தப்படவுள்ளது என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் தெரிவித்தார்.

## விழுப்புரம் வடக்கு மாவட்டம்

## மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல்

# தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர் ப.சேகர் அவர்கள் மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால்; விழுப்புரம் வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, ஜீன் 17 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். “ என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

விழுப்புரம் வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவர் பொறுப்புக்கு செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**விழுப்புரம் வடக்கு மாவட்டம், மாவட்ட அவைத்தலைவராக,**

**திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான்,** தளபதி இல்லம், 59, தேசூர் பாட்டை சாலை, கிருஷ்ணாபுரம், செஞ்சி, விழுப்புரம் மாவட்டம்-604 202. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 17.06.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



மதுரை மாநகர் மாவட்ட இளைஞரணி சார்பில் பைக்காரா பகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்த தினத்தை முன்னிட்டு முதியோர் இல்லத்தில் உள்ள ஆதரவற்றோருக்கு மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. ஆலோசனையின் படி இளைஞர் அணி ராஜா ஏற்பாட்டில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செளந்தரராஜன் முன்னிலையில் அனைவருக்கும் உணவு வழங்கினர். உடன் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் தினேஷ், வட்டச் செயலாளர் சந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.